**மாத்தறை மாவட்டத்தின் 22 கமநல சேவைக் குழுக்களின் - 2022**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** மாத்தறை மாவட்டத்தின் 22 கமநல சேவைக் குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2023 ஆகஸ்ட் 17 ஆம் திகதியில் 2022 ஆம் ஆண்டிற்கான மாத்தறை மாவட்டத்தில் 22 கமநல சேவைக் குழுக்களுக்குரிய கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் 22 கமநல சேவைக் குழுக்களுக்கும் முனைப்பழியுள்ள அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருந்தமைக்கு காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்கலாக கணக்கீட்டு கொள்கைகளுடன் இணங்காமை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல வங்கிக்கு உரிய அனைத்து கணக்குகள் கமநல சேவை குழுக்களின் வருடாந்த கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்டு ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 22 குழுக்களும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 04/2012 ஆம் இலக்க மற்றும் 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 5.6(i) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 04/2012 ஆம் இலக்க மற்றும் 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 5.6(i) இன் பிரகாரம நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் 04 கமநல சேவைக் குழுக்களின் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட வேண்டிய தேறிய சொத்துக்கள்.˙. உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் வரவு செலவுத் திட்ட | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பொது மாதிரிப்படிவத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | புள்ளி விபரங்கள் மற்றும் உண்மையான புள்ளி விபரங்கள் ஒப்பிடப்பட்டு வரவு செலவுத் திட்ட புள்ளி விபரங்களை காட்டுவதற்கு தனியான நிரலொன்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | எடுக்கப்படும். | வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 கமநல சேவை குழுக்களுக்கு சொந்தமான மொத்தம் 1.922 ஹெக்டெயர் ஆன 03 காணித்துண்டுகள், 9,232 சதுர அடியைக் கொண்ட 03 அலுவலக கட்டிடங்கள், 2,430 சதுர அடியைக் கொண்ட 03 உரக் களஞ்சியங்கள், 477 சதுர அடியைக் கொண்ட 03 நாற்று மேடைக் கொட்டகைகள், 164 சதுர அடியைக் கொண்ட அருங்காட்சியகமொன்று, இன்னும் 07 அலுவலக கட்டிடங்கள், 02 உரக் களஞ்சியங்கள், மூன்று விற்பனை நிலையங்கள், இரண்டு நாற்று மேடைக் கொட்டகைகள், உத்தியோக பூர்வ இல்லமொன்று, அலுவலகம் அமைந்துள்ள 07 காணித்துண்டுகள் மற்றும் உரக் களஞ்சியக் காணியொன்று போன்ற நிலையான சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குழுக்களுக்கு சொந்தமான நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மொறவக கமநல சேவைக் குழுவிற்கு கமநல அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட 02 கணனி இயந்திரங்கள், 02 பிரின்டர்கள், கமநல வங்கிப் பெட்டகம் மற்றும் மிஹிதிய செயற்திட்டத்தினால் நன்கொடையாகப் பெறப்பட்ட துவிச்சக்கர வண்டியொன்று போன்ற நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2013 ஆம் ஆண்டில் மெத உயன்கொட கமநல சேவை ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்டிருந்த டிராக்டர் வாகனமொன்று டிரெய்லரின் பரிமாற்றப் பெறுமதியான ரூபா 50,000 கணக்கீடு செய்யப்படாமையால் நிலைான சொத்துக்கள் அப் பெறுமதியில் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | இதற்காக பணம் செலுத்தப்படவில்லை. குறிப்பிட்ட நிலையத்திற்கு மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குழுவிற்கு கையளிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | இரண்டு கமநல சேவைக் குழுக்களில் தேய்மானம் செய்யப்பட்டு முடிக்கப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 171,133 ஆன கணனியொன்று, மரத் தளபாடம் மற்றும் 22 அலுவலக உபகரணங்கள் மற்றும் இரு சக்கர ட்ராக்டர் மற்றும் டிரெய்லர் போன்றன தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றின் பெறுமதி மீண்டும் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீள்மதிப்பீடு செய்யப்பட்டு எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படும். | பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டில் மெதஉயன்கொட கமநல சேவைக் குழுவில் CCTV கெமரா முறைமையொன்றின் பெறுமதி ரூபா 208,220 மூலதனமாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது மேலதிக செலவொன்றாக கணக்கீடு செயயப்பட்டிருந்ததால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அப் பெறுமதியில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மிரிஸ்ஸ கமநல சேவைக்குழுவில் மீளாய்வாண்டில் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் ரூபா 75,043 மற்றும் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 77,958 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டமையால் வருடத்தின் மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 153,001 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் திருத்தப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | தெயியன்தர கமநல சேவைக்குழுக்கள் இரண்டிற்கான | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை | சரியாக கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | வட்டி வருமானம் ரூபா 251,250 கணக்கீடு செய்யப்படாமையால் வருமானம் அந்த அளவினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | வில்பிட்ட கமநல சேவைக்குழுவில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரினால் 2018 ஆம் வருடத்தில் இடம் பெற்ற நிதி மோசடி காரணமாக குழுவிற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 189,716 ஆன தொகை அறவிடப்படாததுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக கண்டறிந்து 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படும். | நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் ஊருபொக்க கமநல சேவை நிலையக் கட்டிடத்தின் கூரை நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 254,155 ஆன செலவு மூலதனமாக்கப்படாததால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அந்த அளவினால் குறைவாகவும், திருத்தச் செலவுகள் அதிகமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதன இயல்பான செலவுகள் மூலதனமாக்கப்பட வேண்டும். |

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கமநல சேவை குழுக்களின் 04 கணக்கு வருடங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனோடொத்த அறிக்கைகளுக்கு இடையே மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,765,727 இணங்காமல் காணப்பட்டது. | 2023 கணக்கு அறிக்கைகளில் திருத்தப்பட்டு காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளின் இணங்காமையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.4 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கமநல சேவைக் குழுக்களில் 10 வருடங்களுககு முன்பிருந்து முன் கொண்டு வரப்பட்டிருந்த தொங்கல் கணக்கு வரவு மீதி மொத்தம் ரூபா 126,089 ஆனது தீர்க்கப்படவில்லை. | கமநல சேவைக் குழுக்களின் தொங்கல் கணக்கு மீதிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தொங்கல் கணக்கு கண்டறியப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 19 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 28,354,024 இற்கான விரிவான குறிப்புக்கள், மதிப்பீட்டு அறிக்கை, மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ், கடன் பதிவேடு, நிலையான சொத்துக்கள் பதிவேடு, உரிமைச் சான்றிதழ் மற்றும் கடன் கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு போன்ற சான்றுகள் காணப்படாமையால் அக் கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்கு அறிக்கைகளில் இக் குறைபாடு திருத்துவதற்கு பிரதேச அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்<br>------------------------ | | | |
| (i) | 30(1)(2)(3)(4) மற்றும் (5) ஆம் பிரிவுகள் | குறிப்பிடப்பட்ட பிரிவுகளின் படி பயிர்ச் செய்கை செய்யக் கூடிய அனைத்து நெல் வயல்களும் நெல் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்பட வேண்டியதுடன் நெல் பயிரிடப்பட முடியாத சந்தர்ப்பங்களில் ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் பல வருடங்கள் அல்லாத பயிர்கள் அல்லது அரையாண்டுப் பயிர்கள் அல்லது நீண்ட | பயிரிடப்படக் கூடிய நிலைமையில் காணப்படுகின்ற தரிசு நெல் வயல்கள் பயிர்ச்செய்கைக்கான திட்டம் மற்றும் வேலை குறிப்புக்கள் முன் மொழியப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலப் பயிர்கள் பயிரிடப்பட முடியும். கமநல சேவைக் குழுக்களில் 12 அதிகாரப் பிரதேசங்களில் காணப்படுகின்ற தரிசு நெல் வயல் 3,925 ஏக்கர் மற்றும் பயிரிடப்பட முடியாத நிலைமையில் காணப்படுகின்ற 1,011 ஏக்கர் வயல்களில் பயிரிடுவதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | | |
| (ii) | 34(4) பிரிவு | மாலிம்பட கமநல சேவை குழுவின் அதிகாரப் பிரதேசத்தில் 20 பேர்ச்சஸ் நெல் வயல் காணிக்கான இரத்தினக் கல் அகழ்வு உரிமமொன்று 2022 யீன் 16 இல் பெறப்பட்டிருந்ததுடன் 2023 ஆகஸ்ட் 11 ஆம் திகதியில் அனுமதிப்பத்திரத்தின் கால எல்லை முடிவடைந்திருந்தது. குறிப்பிடப்பட்ட பிரிவு மற்றும் கமநல சேவை ஆணையாளரின் 2021 சனவரி 01 ஆம் திகதிய 02/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நெல் வயற்காணியை மீட்டெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்காலத்தில் மீட்டெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 56(3)(4) ஆம் பிரிவுகள் | 7 கமநல சேவை குழுக்களின் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 734,408 ஆன ஏக்கர் வரி கொடுப்பனவு புறக்கணிப்பு தொடர்பாக குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வரி புறக்கணிப்பு செய்தவர்களின் முகவரி இல்லாமையால் தெரிவிப்பதில் சிக்கல் காணப்பட்டது. ஏதிர்வரும் ஆண்டிற்குள் நிலுவை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396 | 02 கமநல சேவைக் குழுக்களின் 2008 முதல் 2019 வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத ரூபா 98,799 ஆன 08 காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கண்டறியப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 757 (2) (அ) (ஆ) மற்றும் (4) | 08 கமநல சேவைக் குழுக்களில் மீளாய்வாண்டில் வருடாந்த பொருள், மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 880, உள்ளக உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2019 மார்ச் 23 ஆம் திகதிய 07/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2020 ஜூன் 25 ஆம் திகதிய 08/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை | 21 கமநல சேவைக் குழுக்களில் பிணை வைக்கப்பட வேண்டிய 447 உத்தியோகத்தரினால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2016 செப்டெம்பர் 08 ஆம் திகதிய 7/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | 06 கமநல சேவைக் குழுக்களில் விற்பனை நிலையமொன்று மற்றும் கொம்போஸ்ட் செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வில்லை. | விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2009.04.16 ஆம் திகதிய 09/2009, 2017.04.19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க மற்றும் 2023.05.23 ஆம் திகதிய 02/2021(viii) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | தெனியாய கமநல சேவைக் குழுவின் கைரேகை அடையாள இயந்திரம் பொருத்தப்பட்டு 2019 செப்டெம்பர் 04 ஆம் திகதி முதல் செயற்படாமல் இருந்தது. | இது தொடர்பாக வழங்குநர் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2014 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 07/2014 (107 திருத்திய iii) ஆம் இலக்க சுற்றறிக்கை | கமநல சேவைக் குழுவொன்றின் தினசரி கையில் வைத்திருக்கக்4டிய பணத்தின் எல்லை ரூபா 10,000 ஆக இருந்தபோதிலும் , 04 கமநல சேவைக் குழுக்களில் மீளாய்வாண்டில் ஏப்ரல் 26 ஆம் திகதி முதல் திசெம்பர் 30 வரையயான காலப்பகுதியில் ரூபா 11,960-660,007 ஆன தொகையொன்று கையில் வைக்கப்பட்டிருந்தது. | உரச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்ட காலப்பகுதியில் இவ்வாறு நிகழ்ந்துள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் 17 கமநல சேவைக் குழுக்களின் செயற்பாட்டு விளைவின் கூட்டுத்தொகை ரூபா 4,398,884 ஆன மிகையாகவும், 05 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 1,002,405 ஆன பற்றாக்குறையாகவும் இருந்ததுடன் , அதனோடொத்த முன்னைய ஆண்டில் 19 கமநல சேவைக் குழுக்களின் செயற்பாட்டு விளைவின் கூட்டுத்தொகை ரூபா 4,619,194 ஆன மிகையாகவும், 03 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 184,184 ஆன பற்றாக்குறையாகவும் இருந்தன. அதன் பிரகாரம் 22 கமநல சேவைக் குழுக்களின் ஒட்டுமொத்த விளைவுகளில் ரூபா 1,038,531 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.1.1 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

i. கமநல சேவைக் குழுக்களின் அடிப்படை பணிப்பொறுப்பொன்றென உரம், விவசாய இரசாயனப் பொருட்கள், விதைகள் மற்றும் கன்றுகள், விவசாய உபகரணங்கள் உட்பட விவசாய பண்டங்களை விற்பனை செய்தல் ஆகக் காணப்படுவதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக 22 கமநல சேவைக் குழுக்களின் மொத்த விற்பனையின் கூட்டுத்தொகை ரூபா 53,267,978 மற்றும் முழு மொத்த இலாபத்தின் கூட்டுத்தொகை ரூபா 1,531,848 தொகையாக காணப்பட்டன. அதன்படி, ஒரு கமநல சேவைக் குழுவின் வருடாந்த சராசரி விற்பனைப் பெறுமதி ரூபா 2,421,272 தொகையாக காணப்பட்டதுடன், சராசரி மொத்த இலாபம் ரூபா 69,629 தொகையாக இருந்தது

ii. சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 22 கமநல சேவை குழுக்களின் நிதி நிலைமை பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| | | --------- |
| <u>மொத்தச் சொத்துக்கள்</u> | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | = | 292,105,421 |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | = | 56,247,402 |
| <u>மொத்தப் பொறுப்புக்கள்</u> | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | = | 257,745,128 |
| நீண்ட கால கடன் பெறுமதி | = | 13,238,620 |
| திரண்ட நிதியப் பெறுமதி (தேறிய சொத்துக்கள்) | = | 77,369,075 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 குழுக்களுக்கு சொந்தமான நீண்ட காலமாக செயலற்று காணப்பட்ட மூன்று நடைமுறைக் கணக்குகள் விளைவற்றதாக பராமரிக்கப்பட்டு வந்தன. | விவசாய இரசாயன சபையின் காப்புறுதி தொகைக்காக பயன்படுத்தப்பட்டிருந்த இக் கணக்கு பயன்படுத்தப்படாததுடன் மூடுவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படாத நோக்கமொன்று இல்லாமல் பராமரிக்கப்பட்டு வருகின்ற நடைமுறைக் கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் 03 கமநல சேவைக் குழுக்களில் 5 நடைமுறைக் கணக்குகள் ரூபா 23,188,679 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் மேலதிக பணத்தை முதலீடு செய்வது தொடர்பாக குழுவின் | குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குழுவின் நிதியத்தை மேம்படுத்துவதற்காக செயற்திறனான நிதி முகாமைத்துவமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கமநல சேவைக் குழுக்களால் விற்பனை செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 388,678 பெறுமதியான மரக்கறி விதைகள் மற்றும் விவசாய இரசாயன இருப்பொன்று காலாவதியாகி இருந்ததுடன் அதன் காரணமாக குழுவிற்கு சமமான பெறுமதியால் நட்டமேற்பட்டிருந்தது. | இருப்பை அகற்றுவதற்கு அல்லது முன்னர் இருந்த அதிகாரிகளிடமிருந்து அறவிட்டுத் தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | குழுவிற்கு ஏற்பட்ட நட்டம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 04 குழுக்களின் 07 உறுப்பினர்கள் எந்தவொரு குழுக் கூட்டத்திலும் பங்கு பற்றவில்லை என்பதுடன் அக் குழுக்கள் உட்பட 07 குழுக்களின் 19 உறுப்பினர்கள் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு மேல் பங்கு பற்றாமல் இருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 51(6)(ஈ)(I) மற்றும் (II) ஆம் பிரிவுகளின் பிரகாரம் அவர்களின் நியமனம் நிறுத்தப்பட்டு அதற்காக வேறு நபர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சமூகமளிக்காத உறுப்பினர்களுக்காகப் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செயற்குழுவின் செயற்பாடுகள் செயற்திறனுடன் பேணப்படுவதற்காக குழுவின் முழுக் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 20 கமநல சேவை குழுக்களின் இறுதிக் கணக்கு | எதிர்காலத்தில் திருத்தப்படுவதற்கு | நீண்ட காலமாக காணப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கைகளில் நீண்ட காலமாக காணப்பட்டு வருகின்ற அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் தீர்க்கப்படுவதற்கு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 7/5/12/11 ஆம் இலக்க மற்றும் 2022 யூன் 01 ஆம் திகதிய கடிதம் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2 முதல் 30 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தீர்க்கப்படாமல் காணப்படுகின்ற மொத்தம் ரூபா 11,856,959 ஆன 165 பெற வேண்டிய மீதிகள் மற்றும் 2 முதல் 20 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில தீர்க்கப்படாமல் காணப்படுகின்ற ரூபா 7,844,827 ஆன 165 செலுத்த வேண்டிய மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருகின்ற அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கமநல அபிவிருத்தி ஆணையாளரினால் கடன் அடிப்படையில் மெத உயன் கொட கமநல சேவைக் குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த 4 சக்கர ட்ராக்டரொன்றுக்காக செலுத்த வேண்டிய ரூபா 267,922 ஆன கடன் மீதி 10 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக தீர்க்கப்படவில்லை. | இந்த ட்ராக்டர் மஹவ ட்ராக்டர் முற்றததிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகிள்ற நீண்டகாலக் கடன் மீதிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டில் தெனியாய கமநல சேவைக் குழு அதிகாரப் பிரதேசத்தில் 04 விவசாயிகளால் செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 70,890 ஆன ஏக்கர் வரிப்பணம் மற்றும் விவசாய வங்கிப் பணத்தை கையளிக்காத விவசாய ஆராய்ச்சி உற்பத்தி அதிகாரிக்கு எதிராக விசாரணை நடவடிக்கை | விசாரணை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | விசாரணையை துரிதப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படுவதற்கு 2023 ஏப்ரல் 27 கணக்காய்வுத் திகதி வரையில் தவறியிருந்தது. | | |
| (உ) | தெனியாய கமநல சேவைக் குழுவின் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 328,160 இருப்பு பௌதீக ரீதியாக காணப்பட்டதுடன் தொடர்புடைய அறிக்கையிடப்பட்ட இருப்புப் புத்தகங்களிலும் காணப்படவில்லை. நீண்ட காலமாக காணப்பட்டு வருகின்ற இந்த இருப்பு பற்றாக்குறை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் அடையாளம் காணப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு மாவட்ட கமநல சேவை அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. | விசாரணை நடாத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

**3.4 சர்ச்சைகத் தன்மையான கொடுக்கல் வாங்கல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மெத உயன்கொட கமநல சேவை குழு அதிகாரப் பிரதேசத்தில் 35 பேர்ச்சஸ் நெல் வயல் காணியொன்றுக்கு 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் திருத்தப்பட்ட 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 34(i) பிரிவில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க இயந்திரமாக்கப்பட்ட மண் கழுவுதல் மற்றும் மணல் எடுக்கும் செயற்திட்டத்திற்காக கமநல சேவை ஆணைக்குழுவினால் ஒரு வருட காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அனுமதிப்பத்திரத்தின் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு முரணாக நெல் வயல்களை நிரப்பி சீமெந்து கலந்த களிமண் | இது தொடர்பாக ஆணையாளர் நாயகத்திடமிருந்து ஆலோசனை பெறப்பட்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சட்டரீதியற்ற முறையில் நெல் வயல்காணிகளை பயன்படுத்துவது தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் றடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வியாபாரமொன்று நடாத்தப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. அனுமதிப்பத்திரத்தில் காலமும் முடிவடைந்து விட்ட போதிலும் ஒப்பந்தத்தை மீறி நெல் வயல் காணிகளை பயன்படுத்துவது தொடர்பில் சட்டத்தின் 34(2) (4) பிரிவின் பிரகாரம் அனுமதியை இரத்துச் செய்வதற்கு மற்றும் நெல் வயல் காணியை மீட்டெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்க் கோவையின் 8.9.1 (அ) மற்றும் 8.12.2 இன் பிரகாரம் ஹக்மன கமநல சேவைக் குழுவின் காப்பகமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்த உடன்படிக்கையொன்று இன்றி கமநல அமைப்பொன்றிற்கு ரூபா 269,620 செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கையொன்று இல்லாது நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். | கொடுப்பனவை அங்கீகரித்த மற்றும் சான்றுறுதி செய்த உரிய அதிகாரிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கமநல வங்கிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 17 கமநல சேவைக் குழுக்களுக்கான கமநல வங்கிகளால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த செயற்திட்டக் கடன் மற்றும் விவசாய கடன்களில் மீளாய்வாண்டின் இறுதியில் 1,436 விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 34,893,153 ஆன கடன் மீதி காலாவதியாகி இருந்தது. அவற்றை அறவிடுவதற்கான முன்னேற்றம் குறைந்த | காலாவதியான கடன் தொடர்பாக கமநல நியாயச் சபை மற்றும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் எடுக்கப்படுகின்ற தீர்மானததின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கிக் கடன் உரிய காலத்தில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மட்டத்தில் காணப்பட்டது. | | |
| (ஆ) | 02 கமநல சேவைக் குழுக்களில் 2022 திசெம்பர் 31 இல் மரணித்த 08 விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய விவசாய மற்றும் செயற்திட்டக் கடன்களின் மொத்தம் ரூபா 202,261 ஐ தீர்ப்பது தொடர்பாக கமநல இடர்க்கடன் மேவுகை நிதியம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடன்களைப் பதிவளிப்பதற்கு அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் அக்கடன்கள் தீர்க்கப்படல் வேண்டும். |